මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு

පොදු කාර්යාලය :011-2868441, 2868442, 286844
பொது அலுவலகம்
ෆැක්ස්/தொலைநகல்: 011-2868426
web : www.elections.gov.lk

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යාලය
සරණ මාවත, රාජගිරිය (10107)
தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்
சரண மாவத்தை, இராஜகிரிய (10107)
e-mail : info@elections.gov.lk

| | | |
|---|---|---|
| මගේ අංකය : | ඔබේ අංකය : | දිනය : |
| எனது இல : EC/EDR/PE/2024/6-4B | உமது இல : | திகதி : 2024.09.25 |

**சுற்றறிக்கை இல: PE/2024/03**

**பதிவுத் தபால்**
**மிக முக்கியமானது**

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்,
அனைத்து மாகாண சபைகளினதும் பிரதம செயலாளர்கள்,
தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர்,
அனைத்து மாவட்ட செயலாளர்கள்,
அனைத்து மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள்/ மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள்,
அனைத்து மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,
அனைத்து திணைக்களத் தலைவர்கள்,
அனைத்து அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச்சட்ட சபைகளின் தவிசாளர்கள்/ பொது முகாமையாளர்கள்,

**பாராளுமன்றத் தேர்தல் - 2024.11.14**
**அரசாங்கத்திற்கும் அரச கூட்டுத்தாபனங்களுக்கும் நியதிச்சட்ட சபைகளுக்கும் சொந்தமான ஆதனங்கள் தேர்தல் காலப்பகுதியினுள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுத்தலும், அலுவலர்களதும் ஊழியர்களதும் ஆட்சேர்ப்புக்களை/ பதவியுயர்வுகளை/ இடமாற்றல்களை மட்டுப்படுத்தலும்**

பாராளுமன்றத் தேர்தலுக்கான பெயர் குறித்த நியமனம் கோரும் அறிவித்தல் 2024.09.24 ஆந் திகதி பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. அன்றைய தினம் தொடக்கம் வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டு முடிவடையும் வரையான காலப்பகுதி, "தேர்தல் காலப்பகுதி" என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 104 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியினுள் அரசியற் கட்சிகளை/ குழுக்களை/ வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்கு காரணமாக அமையக்கூடிய அல்லது ஏனைய கட்சிகளுக்கு/ குழுக்களுக்கு/ வேட்பாளரொருவருக்கு பாதிப்பேற்படுத்தக்கூடிய விதமான நடவடிக்கைகளுக்கு அரச ஆதனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்ந்து கொள்ள வேண்டுமென்றும், அனைத்து அரச அலுவலர்களை/ ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்/ பதவியுயர்வு வழங்குதல்/ இடமாற்றம் செய்தல் போன்ற விடயங்களை மட்டுப்படுத்த வேண்டுமெனவும், அரச ஆதனங்களின் நிருவாகத்திற்குப் பொறுப்பாகவிருக்கின்ற அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் அனைவரினதும் கவனத்தை ஈர்க்குமுகமாக இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

02. அரசியலமைப்பிற்கான இருபத்தோராம் திருத்தத்தின் பிரகாரம், "தேர்தலொன்று நடாத்தப்படுகின்ற காலப்பகுதியினுள் அரசாங்கத்திற்கு அல்லது ஏதேனும் அரச கூட்டுத்தாபனமொன்றுக்குச் சொந்தமான ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனமொன்று" ஏதேனுமோர் அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவை தெரிவுசெய்வதை ஊக்குவிக்கும் அல்லது தடுக்கும் நோக்கத்திற்காக ஏதேனுமோர் அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பயன்படுத்தப்படுவதை தடைசெய்கின்ற தத்துவம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு உண்டு. அவ்வுறுப்புரையின் 104(ஆ)4(அ) உப உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் ஆக்கப்படுகின்ற கட்டளைகளைச் செயற்படுத்துவதற்கு அரசுக்குச் சொந்தமான ஆதனங்களுக்குப் பொறுப்பாகவிருக்கின்ற அலுவலர்கள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

03. 2024 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல்களுக்குரிய அரச ஆதனங்களைத் துஷ்பிரயோகம் செய்தலும், தேர்தல் பிணக்குகளும் தொடர்பில் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் அந்தந்த அமைச்சுக்கள், மாகாண சபைகள், திணைக்களங்கள், மாகாண சபை

அமைச்சுக்கள், அரச கூட்டுத்தாபனங்கள், அத்தகைய நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சுச் செயலாளர்களை/ தாபனத் தலைவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு அமைச்சரவை அமைச்சுக்களிலாயின், மேலதிக செயலாளரொருவரை அல்லது நிருவாக விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள சிரேட்ட உதவிச் செயலாளரொருவரையும் திணைக்களங்களிலாயின், திணைக்களத் தலைவர்/ மேலதிக தலைவர் அல்லது அந்த மட்டத்திலுள்ள சிரேட்ட அலுவலரொருவரையும், மாகாண சபைகளின் பிரதம செயலாளரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குப் பொருத்தமான பிரதிப் பிரதம செயலாளரொருவரையும் கூட்டுத்தாபனங்கள்/ சபைகளிலாயின், நிருவாக விடயத்திற்குப் பொறுப்பான மேலதிக பொது முகாமையாளர் மட்டத்திலான சிரேட்ட அலுவலரொருவரையும் 2024.10.01 ஆம் திகதிக்கு முன்னர் பெயர் குறித்து அனுப்பிவைக்குமாறு இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

04. அதற்கமைய, கொழும்பு மாவட்டத்திற்குரிய அரச நிறுவனங்களில் அரச வளங்களுக்குப் பொறுப்பாகவிருக்கின்ற/ பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள/ முறைப்பாடுகள் சம்பந்தமான இணைப்பு அலுவலரைப் பெயர் குறித்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்திற்கமைய பூரணப்படுத்தி துரிதமாக தொலைநகல் மூலம் (011-2868153/ 01-2877618) மற்றும் electionedr@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது அஞ்சல் மூலம் தேர்தல் பிணக்குத் தீர்வு அலகு, தேர்தல் ஆணைக்குழு, சரண மாவத்தை, இராஜகிரிய என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும், ஏனைய மாவட்டங்களிலுள்ள அரச நிறுவனங்களின் அரச வளங்களுக்குப் பொறுப்பாகவிருக்கின்ற, முறைப்பாடுகள் தொடர்பில் பெயர் குறிக்கப்படும் இணைப்பு அலுவலர் பற்றிய தகவல்களை குறித்த மாவட்டத்தின் தேர்தல் அலுவலகத்தின் பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

05. (i) தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்திற்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள், ஜீப் வண்டிகள் முதலான அனைத்து வாகனங்களும் ஹெலிகொப்டர்களும் வானூர்திகளும் ஈடுபடுத்திக் கொள்ளப்படுவதாக கடந்த கால தேர்தல்களின்போதும் இந்த ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ஆகையால், அரச வாகனங்களுக்குப் பொறுப்பாகவிருக்கின்ற அனைத்து அலுவலர்களும் அவ்வாகனங்களை எந்தவோர் அரசியற் கட்சியினதும் சுயேச்சைக் குழுவினதும் அல்லது வேட்பாளரொருவரின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தாத விதத்தில் தேர்தற் காலப்பகுதியினுள் வாகன குழாமைப் பேணுவதன் மீது விசேட கவனம் செலுத்த வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றேன். அரசாங்கத்திற்குச் சொந்தமான அலுவலர்களுக்கென குறித்தொதுக்கப்பட்டுள்ள வாகனங்களும் (Assigned vehicles) வாடகைக்கு பெறப்பட்டு கடமை அலுவல்களில் ஈடுபடுத்தப்படுகின்ற வாகனங்களும் இவற்றில் அடங்குமென்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும். இக்காலப்பகுதியினுள் அலுவலர்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள வாகனங்கள் (Assigned vehicles) தவிர்ந்த குறிப்பாக குழாம்களுக்கு இணைக்கப்பட்டுள்ள வாகனங்களுக்கும் ஏனைய வாகனங்களுக்கும் உரிய ஓட்ட விவரக்குறிப்புகள் முறையாகப் பேணி வரப்பட வேண்டுமென்பதோடு, இவ்வோட்ட விவரக்குறிப்புகள் பதவிநிலை அலுவலர் ஒருவரினால் நாளாந்தம் பரீட்சிக்கப்பட்டு அவ்வாகனங்கள் தேர்தற் பிரச்சார நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்படுவதில்லை என்பது தொடர்பில் திருப்தியடைதல் வேண்டும். கடமை அலுவல்களுக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக போலியான ஓட்ட விவரக்குறிப்புகளை இட்டு அரச வாகனங்கள் அரசியல்சார் ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கடந்த கால தேர்தல்களின்போது அறிக்கையிடப்பட்டுள்ளமையால், அவ்வாறான போலியான விடயங்களுக்காக அரச வாகனங்களை ஈடுபடுத்தாமலிருப்பதன் மீது அவற்றின் நிருவாகத்திற்குப் பொறுப்பாகவிருக்கின்ற அலுவலர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும்.

(ii) எந்தவொரு வாகனத்தையும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் குறித்தொதுக்கப்பட்ட பிரத்தியேகமான பதிவிலக்கம் இன்றி சேவையிலீடுபடுத்த முடியாதென்பதால் எந்தவோர் அமைச்சருக்கு, பிரதி அமைச்சருக்கு அல்லது அவர்களின் பணியாட்குழு அங்கத்தினர்களுக்கு அல்லது வேறு எவருக்கும் உரிய பதிவிலக்கம் இன்றி அரசாங்கத்தின் அல்லது அரச நிறுவனங்களின் வாகனங்களைப் பயன்படுத்த முடியாது. ஆதலால், அனைத்து திணைக்களங்கள், அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் திருத்தகங்களுக்கு (கராஜ்) உரிய இலக்கங்களில் (போலியான இலக்கங்களில்) சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை என்பதை அமைச்சுச் செயலாளர்கள்/ திணைக்களத் தலைவர்கள் சந்தேகத்திற்கு இடமின்றி உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

06. அரச அலுவலகங்கள், கட்டிடங்கள், பாடசாலைகள், அரசுக்குச் சொந்தமான ஏனைய கட்டிடங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பனவும் அரச வளங்களாகும். ஆதலால், அக்கட்டிடங்களை அரசியல் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் என்பவற்றிற்கு பயன்படுத்தலும் ஆகாது. தேர்தற் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசாங்கத்திற்குச் சொந்தமான சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை இல்லங்கள் என்பவற்றை கட்டணமின்றி வழங்குவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதென்பதையும் கருத்திற்கொள்ள வேண்டும். மேலும் அனைத்து மாகாணங்களிலும் அமையப்பெற்றுள்ள அரசிற்கு அல்லது அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை இல்லங்கள் போன்றவற்றை எந்தவோர் அரசியல்வாதிக்கு, அலுவலருக்கு, வேறொரு நபருக்கு வாக்கெடுப்புக் காலப்பகுதி முழுவதற்குமென குறித்தொதுக்கிக் கொடுப்பதை தவிர்ந்துகொள்ள வேண்டும். அதேபோல், அத்தகைய இடங்களில் தங்குமிட வசதிகளைப் பெறுகின்ற நபர்களுக்கு அரசியற் கட்சிகளை அல்லது வேட்பாளர்களை ஊக்குவிக்கும் பணிகளில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

அரசுக்குச் சொந்தமான கட்டிடங்கள், அவை அமையப்பெற்றுள்ள காணிகள் என்பவற்றை அரசியற் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் தேர்தற் பிரச்சார விளம்பரங்கள், சுவரொட்டிகள், பாரியளவிலான உருவப்படங்கள் என்பவற்றைக் காட்சிக்கு வைப்பதற்கு பயன்படுத்த இடமளித்தலாகாது.

07. (i) தேர்தல் காலப்பகுதியினுள் அரச நிதியைச் செலவிட்டு நடாத்தப்படுகின்ற பல்வேறு விதமான நடமாடும் சேவைகள், கண்காட்சிகள், திறப்பு விழாக்கள் போன்ற வைபவங்கள் முதலான அரசியல் பிரிவுகளோடு தொடர்புடைய ஆட்களின் பங்களிப்போடு மேற்கொள்ளப்படுவதோடு, அத்தகைய சந்தர்ப்பங்களில் பாராளுமன்றத் தேர்தலோடு தொடர்புடைய பல்வேறு அபிப்பிராயங்களும் அவர்களினால் வெளிப்படுத்தப்படுவதற்கு சாத்தியமுள்ளது. அத்தகைய வெளிப்படுத்துகையொன்று தேர்தலுக்குப் போட்டியிட முன்வந்துள்ள வேட்பாளர்களின் வேட்பாண்மைக்கும் முறையற்ற விதத்தில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். இத்தகைய வைபவங்களை நடாத்துவதன் மூலம் ஏதேனுமொரு கட்சி/ சுயேச்சைக் குழு அல்லது வேட்பாளர் ஊக்கப்படுத்தப்படுவதாக அல்லது வேறொரு கட்சி/ குழு அல்லது வேட்பாளருக்குப் பாதிப்பொன்று ஏற்படுத்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்க முடியுமாதலால், இத்தேர்தல் காலப்பகுதியினுள் அத்தகைய வைபவங்களை நடாத்துவதைத் தவிர்ந்துகொள்வது உகந்தது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அத்தியாவசிய நடமாடும் சேவைகளை இத்தேர்தல் காலப்பகுதியினுள் நடாத்துவதற்கு, பாராளுமன்றத் தேர்தலோடு தொடர்புடைய பெயர் குறித்த நியமனம் கோரும் அறிவித்தல் வெளியிடப்பட முன்னர் திகதி தீர்மானிக்கப்பட்டிருப்பின், அத்தகைய சந்தர்ப்பங்கள் தொடர்பாக உடனடியாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போது அது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். ஆயினும், ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் அல்லது பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற நடமாடும் சேவைகளுக்கு இம்மட்டுப்பாடுகள் செயல்வலுப்பெறாது. இத்தகைய நடமாடும் சேவைகளை அலுவலர்களின் பங்களிப்புடன் மாத்திரம் நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தப்படுகின்றது.

(ii) இக்காலப்பகுதியினுள் அரச காணிகளைப் பகிர்ந்தளித்தல், அரச காணி உரித்து உறுதிகளின் அல்லது வீட்டு உரித்து கைமாற்றல் உறுதிகளின் பகிர்ந்தளிப்புகள், பெருந்தோட்டக் கைத்தொழில்களுக்கு அல்லது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு அரிசி உள்ளிட்ட உணவுப்பொருட்கள், பணம் மற்றும் வேறு நிவாரண உதவிகள், உரம், விவசாய உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள், சுயதொழில் உதவுகருவிகள், மிதி வண்டிகள், சூரிய ஒளி மின் விளக்குகள், வீடுகளை நிர்மாணிப்பதற்கான கட்டிடப் பொருட்கள் முதலியவற்றைப் பகிர்ந்தளிப்பதற்கான கருத்திட்டங்கள் மற்றும் வீட்டுக் கடன் வினியோகம்/ நட்டஈட்டுத் தொகைகளைப் பகிர்ந்தளித்தல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களும் இடைநிறுத்தப்படல் வேண்டும். அவ்வாறு வழங்கப்படுவதாக அரச அலுவலர்களினால் அறிவிப்புகள் வெளியிடப்பட்டு அவற்றிற்கான பட்டியல்களைத் தயாரித்தலும் இக்காலக்கெடுவிற்குள் மேற்கொள்ளப்படக் கூடாது. ஏனெனில், அத்தகைய பணிகளூடாக வாக்காளர்களுக்கு உபசரணை செய்யும் தவறுகள் இடம்பெறுவதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றமையாலும், இத்தகைய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களினூடாக அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களை ஊக்குவித்தல் மேற்கொள்ளப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றமையாலுமாகும். மேலும், வீட்டுக் கடனுதவி வழங்குவதற்கான படிவங்களைப் பகிர்ந்தளித்தல், கட்டிடப் பொருட்களை வழங்குவதற்கான படிவங்களைப் பகிர்ந்தளித்தல் போன்ற நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்படல் வேண்டும். எனினும், ஒத்திவைக்க முடியாத அவசர கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு ஏற்கனவே நாள் குறிக்கப்பட்டிருப்பின் அல்லது அவசர விசேட தேவைப்பாடொன்று ஏற்பட்டிருப்பின், அது தொடர்பாக எனக்கு அறிவித்தல் வேண்டும். அப்போது அது தொடர்பான பொருத்தமான அறிவுறுத்தல்கள் வெளியிடப்படும். அத்தகைய கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலாயினும், எந்தவோர் அரசியல் கட்சியினதும்/ சுயேச்சைக் குழுவினதும் வேட்பாளர் ஒருவருக்கு விசேட அனுகூலம் அல்லது பிரதிகூலம் ஏற்படாத விதத்தில் அமுல்செய்யப்பட வேண்டுமென்பதும் அதற்காக அலுவலர்கள் மாத்திரம் கலந்துக்கொள்ளச் செய்யப்பட வேண்டுமென்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

08. (i) இத்தேர்தலோடு தொடர்புடைய அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்கள் உள்ளிட்ட நிறுவனங்களின் அலுவலர் எவருக்கும் அலுவலக நேரத்தினுள் அல்லது அலுவலக நாட்களில் கடமை லீவு பெற்றுக்கொண்டு ஏதேனும் ஒரு கட்சியை/ குழுவை அல்லது வேட்பாளரொருவரை ஊக்குவிப்பதற்காக அல்லது ஏதேனும் ஒரு கட்சி/ ஒரு குழு அல்லது வேட்பாளர் ஒருவருக்கு எதிராக செயற்படுவதற்கு அவகாசம் அளிக்கக் கூடாதென்பதோடு, அவ்வாறு செயற்படுகின்ற அலுவலர்கள்/ ஊழியர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(ii) அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்தற்ற அரச பதவிநிலை அலுவலர்கள், கூட்டுத்தாபனங்கள்/ நியதிச்சட்ட சபைகளின் பதவிநிலை அலுவலர்கள், கிராம அலுவலர்கள்/ வன அலுவலர்கள் போன்ற சமாதான அலுவலர்கள் மற்றும் பாதுகாப்புப் பிரிவுகளின் அங்கத்தினர்கள் எவருக்கும் தமது அலுவலக நேரத்தினுள் மாத்திரமின்றி, அலுவலக நேரத்திற்குப் புறம்பாகவும் விடுமுறை நாட்களிலும்கூட நேரடியாக அல்லது மறைமுகமாக எந்தவோர் அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு அல்லது வேட்பாளர் ஊக்குவிக்கப்படும் விதத்தில் அல்லது பாதிப்புக்குள்ளாகும் விதத்திலான செயற்பாடுகளில் கலந்துகொள்வதிலிருந்தும், அவற்றுக்கு உடந்தையாக இருப்பதிலிருந்தும் தவிர்ந்திருத்தல் வேண்டும். அதாவது, அரசியல் உரிமைகளை

அனுபவிக்க உரித்தற்ற அனைத்து அலுவலர்களுக்கும் அரசியல் ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி கிடையாதென்ற கட்டளையை மிகவும் கடுமையாக அமுல்படுத்துதல் வேண்டும்.

(iii) மேலும் கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் என்பவற்றின் தவிசாளர்கள், பணிப்பாளர்கள் ஆகியோரும் இத்தேர்தற் காலப்பகுதியினுள் எந்தவோர் அரசியற் கட்சிக்கும் அல்லது சுயேச்சைக் குழுவுக்கும் அல்லது வேட்பாளரெவருக்கும் ஊக்குவிப்பான அல்லது பாதிப்பான விதத்திலான செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

(iv) அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்தற்ற அரச அலுவலரொருவர் தனது தனிப்பட்ட சமூக வலைத்தள கணக்கொன்றை அல்லது வேறு கணக்கொன்றைப் பயன்படுத்தி ஏதேனும் அரசியல் கட்சியொன்றை அல்லது வேட்பாளரொருவரின் ஊக்கப்படுத்தலுக்கு அல்லது பாதிப்பு ஏற்படுவதற்கு காரணமாக அமையக்கூடிய எந்தவித பிரச்சாரத்தை அல்லது வெளிப்படுத்தலைச் செய்வது ஒரு குற்றமாகும். அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துள்ள அலுவலராயினும்கூட கடமை நேரத்தில் அரச வளங்களைப் பயன்படுத்தி அவ்வாறான பிரச்சாரத்தில் ஈடுபடுவது ஒரு குற்றமாகும்.

09. (i) தேர்தல் கடமைகளுக்காக ஈடுபடுத்த எதிர்பார்க்கப்படுகின்ற அரச பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட அனைத்து அரச அலுவலர்களினதும் பொதுவான இடமாற்றல்களை தேர்தல் நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்படும் இறுதி நாள் வரை இடைநிறுத்தி வைக்க வேண்டுமென்பதோடு, தேர்தற் கடமைக்காக ஈடுபடுத்தப்படாத அரசாங்க அல்லது அரச கூட்டுத்தாபனங்களின் அலுவலர்களை வாக்கெடுப்பு காலப்பகுதியினுள் இடமாற்றம் செய்கின்றபோது அரசியற் காரணங்களின் பேரில் இத்தகைய இடமாற்றல்கள் மேற்கொள்ளப்பட்டதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறாதவாறு சம்பந்தப்பட்ட இடமாற்றல்களை மேற்கொள்ள அனைத்து அதிகாரிகளும் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

(ii) தேர்தற் காலப்பகுதியினுள் அரச அலுவலர்களை அத்தியாவசிய காரணங்களின் பேரில் உதாரணமாக புலமைப்பரிசில், உயர்கல்வி, மருத்துவ சிகிச்சை, யாத்திரைகள் என்பவற்றை நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டுப் பயணங்களை மட்டுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படவில்லை. ஆதலால், அவ்வாறான தேவைப்பாடுகளுக்காக அலுவலர்கள் வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வதாயின், அது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவிடமிருந்து முன்னனுமதியைப் பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடொன்றில்லை. இருப்பினும், அலுவலர்கள் குழுவாக இக்காலப்பகுதியினுள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதாயின், அதற்கு முன்னனுமதியைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும். மேலும், மிகவும் அவசரமான மற்றும் ஒத்திவைக்க முடியாத காரணங்களினால் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதற்கான அவசியம் இருப்பின், அதற்கு அனுமதியளிப்பது தொடர்பில் பரிசீலிக்கப்படுவதன் காரணமாக அவ்வாறான சந்தர்ப்பங்கள் தொடர்பிலான கோரிக்கைகளை முன்கூட்டியே சமர்ப்பிக்க வேண்டும்.

(iii) பாராளுமன்றத் தேர்தல் பற்றிய அறிவித்தல் வெளியிடப்பட முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த அலுவலர்களின் ஆட்சேர்ப்புகள்/ பதவியுயர்வுகள் என்பவற்றுக்கான நாடளாவிய வேலைத்திட்டமொன்றை காலந்தாழ்த்தாமல் நடைமுறைப்படுத்த வேண்டுமென அமைச்சுச் செயலாளர் எதிர்பார்க்கின்றபோதும், தீவு முழுவதற்கும் பாதிப்புச் செலுத்தக்கூடியவாறு அரச சேவைக்கு அல்லது அரச நிறுவனங்களுக்கு ஏற்புடைய முறையாக, அரசியற் தலையீடுகள் இன்றி மேற்கொள்ளப்படுகின்ற வேறு ஆட்சேர்ப்புக்கள்/ பதவியுயர்வுகள் என்பவற்றுக்கும் இச்சுற்றறிக்கை ஏற்புடையதாகாது.

(iv) மேலும் ஏதேனும் விசேட அத்தியாவசிய விடயமொன்று காரணமாக (அதாவது, ஒழுக்காற்று நடவடிக்கைகள், அலுவலரின் கோரிக்கையின் பேரில் அனுதாபத்தோடு செயலாற்ற நேரிடுதல். ஏதேனும் பாடநெறியொன்றுக்கு அத்தியாவசியமான போதனாசிரியர்களை வழங்குதல் போன்ற விடயங்கள் காரணமாக) அலுவலர்களை/ ஆசிரியர்களை/ அதிபர்களை இடமாற்றம் செய்ய நேரிடும்போது அத்தகைய இடமாற்றல்கள், அரசியல்சார் நிகழ்வுகள் காரணமாக மேற்கொள்ளப்படும் இடமாற்றல்கள் அல்லவென்பதை எண்மிக்க முடியுமாயின், அன்றேல் அது சம்பந்தமான முறைப்பாடுகள்/ குற்றச்சாட்டுக்கள் கிடைக்கப்பெறவில்லையெனில், அவ்வாறான இடமாற்றல்கள் தொடர்பில் தேர்தல்கள் செயலகத்தை அறிவுறுத்திய பின்னர் அதற்கான அனுமதியைப் பெற்றுத் தர முடியும்.

(v) துப்புரவேற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் குப்பைகூளங்களை அகற்றும் பணி போன்ற அத்தியாவசிய பணிகளை துண்டிப்பின்றி மேற்கொள்வதற்கு அவசர ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்காயினும் விரிவான தகவல்களை வழங்கி தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த அனைத்து விடயங்களையும் வெளிப்படைத்தன்மையுடனும் தகவலுக்கான உரிமையின் கீழ் அனைத்துப் பிரசைகளுக்கும் பெற்றுக் கொள்ள முடியும் என்பதையும் ஊடகங்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் எதிரணி அரசியற் கட்சிகள் இவ்வாறான விடயங்கள் குறித்து விசேட கவனம் செலுத்துகின்றன என்பதையும் எல்லா சந்தர்ப்பங்களினும் நினைவில் வைத்திருத்தல் வேண்டும்.

(vi) மேலும் பாராளுமன்றத் தேர்தலுக்கான வர்த்தமான அறிவித்தல் 2024.09.24 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளமையால், அத்திகதிக்கு முன்னுள்ள திகதிக்கு முற்றேதியிட்டு நியமனக் கடிதங்கள்/ பதவியுயர்வுகள் மற்றும் ஆட்சேர்ப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதாக தேர்தல்

ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருப்பதால், அவ்வாறான செயற்பாடுகளை எந்த வகையிலும் மேற்கொள்ளக்கூடாதென கண்டிப்பாக வலியுறுத்தப்படுகின்றது.

10. அரச ஆதனங்களை குறிப்பாக அரச நிறுவனங்களையும் அலுவலர்களையும் தேர்தலோடு தொடர்புடைய கட்சிகள்/ குழுக்கள் அல்லது வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்காக ஈடுபடுத்தும் போக்கொன்று காணப்படுவதாக கடந்த தேர்தல்களின்போது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றமையால், அவ்வாறான முறையற்ற செயற்பாடுகளுக்கு எவ்விதத்திலும் இடமளித்தல் ஆகாது. கடந்த கால தேர்தல்களின்/வாக்கெடுப்புகளின் போது கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு, அவசர கடமை அலுவல்களை அல்லது விசேட அபிவிருத்திக் கருத்திட்டங்களை மேற்கொள்ளல் போன்ற விடயங்களை முன்வைத்து கட்சிகளை/ வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்காக (அன்றேல் பாதிப்புக்குட்படுத்துவதற்காக) அரசாங்க/ அரச நிறுவனங்களின் அலுவலர்கள் மற்றும் அரசாங்க/ அரச நிறுவனங்கள் வசமுள்ள அல்லது வாடகைக்குப் பெறப்பட்ட வாகனங்களை அரசியல் தேவைகளுக்காக வேறு அலுவலகங்களுக்கு இணைப்பு செய்தல் போன்ற முறையற்ற செயல்களை மேற்கொள்வதற்கு எந்தவோர் அலுவலருக்கும் இடமளித்தல் ஆகாது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். அதேபோல் தேர்தல் காலப்பகுதியினுள் விசேட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதையும் ஒத்திவைக்க வேண்டும்.

11. இத்தேர்தலின் போது வேட்பாளர்களை அல்லது அவர்கள் போட்டியிட முன்வந்துள்ள அரசியல் கட்சிகளை ஊக்குவிக்கின்ற அல்லது தடுக்கின்ற பணிகள் சார்பாக அரச ஆதனங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்யும் விதத்தில் விதிக்கப்பட்டுள்ள இத்தடையை எவ்வித தளர்த்தலும் இன்றி கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும், ஒவ்வோர் அமைச்சின் கீழுள்ள அனைத்து திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் தலைவர்களுக்கும் இது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சு செயலாளர்கள் தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அதேபோல், அவ்வனைத்து நிறுவனங்களினதும் அலுவலர்கள் இவ்வறிவுறுத்தல்களுக்கும் கட்டளைகளுக்கும் அமைய நடந்து கொள்கின்றார்களா என்பதை அமைச்சுச் செயலாளர்களும் தாபனத் தலைவர்களும் சந்தேகத்திற்கிடமின்றி உறுதிப்படுத்திக்கொள்வதும் இன்றியமையாததாகும்.

12. தேர்தலோடு தொடர்புடைய அனைத்துச் சட்டங்களையும் வலுவாக்கம் செய்வதற்கு, பாதுகாப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குவது உரிய சட்டத்தை வலுவாக்கம் செய்வதற்குப் பொறுப்பாகவிருக்கின்ற அனைத்து அரச அதிகாரிகளினதும் பணியாக இருத்தல் வேண்டுமென அரசியலமைப்பின் 104ஆ (2) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும், தங்களது விசேட கவனம் ஈர்க்கப்படுவது இன்றியமையாதது என்பதையும் தயவுடன் அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

13. இச்சுற்றறிக்கைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், அமைச்சின் பணியாட்குழுவினர்கள் ஆகியோரை அறிவுறுத்தும் பொறுப்பு அமைச்சின் செயலாளருக்கு ஒப்படைக்கப்படுகின்றது என்பதையும், மாகாண ஆளுநர்களை அறிவுறுத்தும் பொறுப்பு ஆளுநரின் செயலாளருக்கு ஒப்படைக்கப்படுகின்றது என்பதையும் பிரதம செயலாளரும் குறித்த மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்களும் ஏற்புடையவாறு ஆளுநர்களை அறிவுறுத்த வேண்டும்.

14. அதேபோல் ஏற்புடைத்தாகுமிடத்து இச்சுற்றறிக்கை தொடர்பாக ஆணைக்குழுக்களின் செயலாளர்களையும், அவ்வாணைக்குழுக்களின் தவிசாளர்களையும், உறுப்பினர்களையும் அறிவுறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

15. அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தவிர, தங்களது அமைச்சின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலர் அன்றேல் கணக்கீட்டு அலுவலர் என்ற வகையில் அரசுக்குச் சொந்தமான ஆதனங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுப்பதும் குறித்த அலுவலர்களின் பொறுப்பென்பதைச் சுட்டிக் காட்டுகின்றேன்.

16. இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக வழக்கமான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள், தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புகள் என்பன அறிவூட்டப்படவுள்ளதோடு, "தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்கள், பொலிஸ் அலுவலர்கள், அரசியற் கட்சிகளின் முகவர்கள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் பிரதிநிதிகள் என்போரை உள்ளடக்கிய தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் பற்றிய செயற்பாட்டு நிலையத்தினால்" இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களோடு தொடர்புடைய முறைப்பாடுகள் குறித்து விசாரணை செய்யப்படும் என்பதையும், பாதிக்கப்பட்ட தரப்பினரால் தேர்தல் மனுக்களிலும் வேறு நீதிமன்றச் செயன்முறைகளிலும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஒவ்வாத விதத்திலான செயற்பாடுகள் தொடர்பான தகவல்களைச் சமர்ப்பிக்க அவகாசமுள்ளது என்பதையும் மேலும் தயவுடன் அறிவிக்கின்றேன்.

17. தேர்தல் ஆணைக்குழுவின் இந்த ஏற்பாடுகளுக்கு அமைந்தொழுகத் தவறுவது ஒரு தவறாகும். இலங்கையின் அரசியலமைப்பின் 104எஎ உப உறுப்புரையின் பிரகாரம் அவ்வாறான தவறொன்றுக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மீது ஓரிலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணம் ஒன்றுக்கு அல்லது மூன்று ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய

குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றேன்.

18. இக்கடிதத்தோடு இணைக்கப்பட்டுள்ள **(EC/EDR/PE/2024/06-4B)** ஆம் இலக்க படிவத்தை பூரணப்படுத்தி அனுப்புவதன் மூலம் இக்கடிதம் கிடைக்கப் பெற்றமை பற்றியும், அதற்கமைய அலுவல்களை மேற்கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டமை பற்றியும் உறுதிப்படுத்துமாறு தயவுடன் அறிவிக்கின்றேன். மேலும், தங்களது நிறுவனம் வசமுள்ள வாகனங்களுக்குப் பொறுப்பாகவிருந்து செயலாற்றும் அலுவலர்கள் பற்றிய விபரங்களையும் அதன் கீழுள்ள பகுதியில் குறிப்பிட்டு அனுப்பிவைக்குமாறு தயவுடன் அறிவிக்கின்றேன்.

19. இந்த அறிவுறுத்தல்கள்/கட்டளைகள், தேர்தல் ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகின்றன.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

பிரதிகள் :-

| | | | |
|---|---|---|---|
| 1. | சனாதிபதியின் செயலாளர் | - | தகவலுக்காக. |
| 2. | பிரதம அமைச்சரின் செயலாளர்/ அமைச்சரவையின் செயலாளர் | - | தகவலுக்காக. |
| 3. | கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் | - | தகவலுக்காக. |
| 4. | அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள் | - | தகவலுக்கும் அவசியமான நடவடிக்கைக்கும். |
| 5. | பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு | - | தகவலுக்காக. |
| 6. | முப்படைத் தளபதிகள்/ சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் | - | தகவலுக்கும் அவசியமான நடவடிக்கைக்கும். |
| 7. | பொலிஸ்மா அதிபர் | - | தகவலுக்காகவும் மற்றும் தேர்தல் சட்டங்களை வலுவாக்கம்செய்யும் அலுவலர்களை அறிவுறுத்துவதற்காகவும். |
| 8. | அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் | - | இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் விதிமுறைகளுக்கெதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் பற்றி உடனடியாக எனக்கு அறிக்கையிடுவதற்கும் அத்தகைய நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும். |
| 9. | மாவட்ட பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு | - | தகவலுக்கும் தங்களது மாவட்டத்தின் அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்கள், அனைத்து பிரதேச செயலாளர்கள் மற்றும் மாநகர ஆணையாளர்கள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் செயலாளர்கள் ஆகியோருக்கு இக்கடிதத்தின் பிரதியொன்றை அனுப்பிவைப்பதற்கும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவிப்பதற்கும். |
| 10. | தலைமை அலுவலகத்தின் அனைத்து பதவிநிலை அலுவலர்கள் | | |

EC/EDR/PE/2024/6-4B

**சுற்றறிக்கை கிடைத்தமை பற்றி அறிவிப்பதற்கான படிவம்**

(இப்படிவத்தை நிறுவனத்தின் உத்தியோகபூர்வ கடிதத் தலைப்பொன்றில் தயாரித்து அனுப்புவதற்கு தயவுசெய்து நடவடிக்கையெடுக்கவும். அமைச்சுக்கள் தொடர்பிலாயின், இச்சான்றிதழில் செயலாளர் அல்லது மேலதிக செயலாளரொருவர் அன்றேல் சிரேட்ட உதவிச் செயலாளரொருவரும், திணைக்களமொன்று தொடர்பிலாயின், திணைக்களத் தலைவர் அல்லது மேலதிக அன்றேல் பிரதித் தலைவரொருவரும், கூட்டுத்தாபனமொன்று அல்லது நியதிச்சட்ட சபையொன்று தொடர்பிலாயின், பொது முகாமையாளர்/ மேலதிக பொது முகாமையாளர் அல்லது பிரதிப் பொது முகாமையாளரொருவரும் அல்லது அதற்குச் சமமான பதவியொன்றை வகிக்கின்ற ஒருவரும் கையொப்பமிட்டு அனுப்புதல் வேண்டும்.)

இப்படிவத்தை தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். (www.elections.gov.lk)

---

எனது இல. :-
உமது இல. :- EC/EDR/PE/2024/6-4B

அலுவலக முகவரி:-
...................................................................
...................................................................

திகதி: 2024 ..........................................

பணியகத்தின் தலைவர்,
தேர்தல் பிணக்கு முகாமைத்துவ நிலையம்/ மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
தேர்தல் ஆணைக்குழு/ ..................................................................................
தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய

**பாராளுமன்றத் தேர்தல் - 2024**
**அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுதல்**

மேற்குறித்த விடயம் தொடர்பாக தங்களினால் அனுப்பிவைக்கப்பட்ட 2024.09.25 ஆம் திகதிய, EC/EDR/PE/2024/6-4B ஆம் இலக்க கடிதம் கிடைக்கப்பெற்றதென்பதையும், அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுப்பதற்கு உரியவாறு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டதென்பதையும், அதிலுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய செயலாற்றுவதற்கு எனக்குக் கீழ் இயங்கும் அனைத்து கூட்டுத்தாபன மற்றும் திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட அனைத்து பதவிநிலை அலுவலர்களுக்கும் அறிவிக்கப்படுமென்பதையும் இத்தால் அறிவிக்கின்றேன்.

02. இவ்வமைச்சு/ திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ அதிகார சபை வசமுள்ள வாகனங்களைப் பயன்படுத்துதல்/ விடுவித்தல் தொடர்பான அலுவல்களை மேற்கொள்கின்ற அலுவலரின்/ அலுவலர்களின் விபரங்களை கீழ் குறிப்பிடுகின்றேன்.

பெயர் : ..........................................................................................................
பதவி : ..........................................................................................................
அலுவலக முகவரி : ...............................................................................................

தொலைபேசி இலக்கம் :
(i) அலுவலகம் : ..............................................
(ii) வீடு : ..............................................
(iii) கையடக்க : ..............................................
(iv) மின்னஞ்சல் : ..............................................

..................................................
(கையொப்பம்)

...........................................................................
(பெயரும் பதவியும்)